The 'Nam Nadu' — A Tamil Daily
The Official [Organ] of the D. M. K.

மலர் : 20] சென்னை : கார்த்திகை 20 (5—12—72) செவ்வாய்

தமிழகச் சட்டமன்ற நிகழ்ச்[சிகளை] நாடாளுமன்றத்தில் விவாதிப்பதா?

கழக உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு

மனோகரன் கோரிக்கையை ஏற்க தில்லான் மறுப்பு— நீதிமன்றத்திற்குச் செல்லும் சபாநாயகர் பற்றி வியப்பு

புதுடில்லி, டிச. 5—

'தமிழகச் சட்டப் பேரவையில் கடந்த சனிக்கிழமை நடந்த நிகழ்ச்சிகள் பற்றி நாடாளுமன்ற மக்களவையில் விவாதிக்க வேண்டும்' என்று எழுப்பப்பட்ட கோரிக்கையை அவைத் தலைவர் தில்லான் ஏற்க மறுத்துவிட்டார்.

'தமிழ்நாடு சட்டப் பேரவை பற்றி விவாதிக்க நாடாளுமன்றத்திற்கு உரிமையில்லை'' என்று கழக உறுப்பினர்கள் வாதிட்டார்கள்.

இது தொடர்பாகக் கடுமையான வாக்குவாதம் நடை[பெற்றது.] பெற்றபோது ஒரு கட்டத்தில், 'நீதிமன்றத்துக்குப் போன சபாநாயகரைப் பற்றி இப்போதுதான் நான் கேள்விப்படுகி[றேன்]' என்று தில்லான் குறிப்பிட்டார்.

''தமிழ்நாடு சட்டப் பேரவையில் சட்டம் பாதிக்கப்பட்[டு] விட்டது; எனவே, அதுபற்றி விவாதிக்க வேண்டும்'' என்று மக்களவையில் கி. மனோகரன் — எம். கல்யாணசுந்தரம் — வாஜ்பாய் ஆகியோர் நேற்று தீர்மானம் கொண்டுவந்தனர்.

இதற்கு, தி.மு.கழக உறுப்பினர்கள் அனைவரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்; 'தமிழகச் சட்டப் பேரவை பற்றி முடிவு செய்யத் தமிழக எம்.எல்.ஏ.-க்களுக்குத்தான் உரிமை உண்டு' என்று அவர்கள் தெரிவித்தனர்; இந்தக் கருத்தை, மேற்கு வங்காள இடது கம்யூனிஸ்டு உறுப்பினர் பட்டாச்சாரியா ஆதரித்தார்.

இதையொட்டி, தி.மு.கழக உறுப்பினர்களுக்கும்—மனோகரன், கல்யாணசுந்தரம் ஆகியோருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

சபாநாயகர் தில்லான் இடைமறித்துக் கூறியதாவது :—

''இந்தப் பிரச்சினையை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளுவதற்கு முன் பல பிரச்சினைகள் பற்றி நான் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

முதலாவதாக — சென்னை உயர்நீதி மன்றத்தில் கவர்னர்மீது மதியழகன் தொடர்ந்த வழக்கில் இன்னும் தீர்ப்புக் கூறப்படவில்லை.

இரண்டாவதாக — தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் பற்றியோ, உறுப்பினர்கள் பற்றியோ நாம் விவாதிக்க உரிமை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

மூன்றாவதாக — இதில் அரசியல் சட்டப் பிரச்சினை இருந்தால், அதுபற்றி நீதிமன்றந்தான் முடிவு கூறவேண்டும்; எனவே, தீர்ப்பு வரும் வரையில் நாம் காத்திருக்க வேண்டும்.

நாடாளுமன்ற சபாநாயகர் என்ற முறையில் — கடந்த சனிக்கிழமையன்று தமிழகச் சட்டப் பேரவையில் நடந்த நிகழ்ச்சிகளை நான் ஒருபோதும் ஆதரிக்கமாட்டேன்; பத்திரிகைச் செய்திப்படி, அவையில் பல உறுப்பினர்கள் முறை தவறி நடந்திருக்கின்றனர்.

மேலும், ஒரு சபாநாயகர் நீதிமன்றத்துக்குப் போகிறார் என்பதை, இதற்குமுன் நான் கேள்விப்பட்டதே இல்லை.''

பிறகு தில்லான், மனோகரனைப் பார்த்து, 'மதியழகனை நீதிமன்றத்துக்குப் போக வேண்டா[ம்] என்று நீங்கள் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுங்களேன்' என்று கூறினார்.

மனோகரன் :— ''தமிழ்நாட்டில், 'அசாதாரணமான' சூழ்நிலை நிலவுகிறது; அங்கு சட்டம் சீர்குலைந்துவிட்டது.''

தில்லான் :—''மதியழகன் நீதிமன்றத்துக்குப் போகாவிட்டால், அந்தப் பிரச்சினை பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்க இயலும்; நீதிமன்றத்துக்குப் போனால், நமது கைகள் கட்டப்பட்டுவிடும்''

வாஜ்பாய் :—''தமிழ்நாட்டு நிலவரம் பற்றிப் பொதுவாக நாம் விவாதித்தால் என்ன? தமிழக கவர்னரின் அறிக்கை மத்திய அரசுக்கு வந்திருக்கிறதா? சனநாயக உணர்வுள்ள இந்த அவை, மவுனமாக இருக்கக் கூடாது.''

உலகநம்பி (தி.மு.க.):—''தமிழகச் சட்டப் பேரவை பற்றி விவாதிக்க நாடாளுமன்றத்துக்கு உரிமை கிடையாது.''

இரா. செழியன் :—''தமிழகச் சட்டப் பேரவை இன்று (திங்கட்கிழமை) காலை 9-மணிக்கு ஏற்கனவே கூடி நடந்துகொண்டிருக்கிறது; தமிழகச் சட்டப் பேரவை பற்றி இங்கு நாம் விவாதிக்கக் கூடாது; நாடாளுமன்ற நிகழ்ச்சி பற்றித் தமிழகச் சட்டமன்றம் விவாதித்தால் நாம் அதை ஏற்றுக்கொள்வோமா?''

கல்யாணசுந்தரம் :— ''இன்றைய தமிழகச் சட்டப் பேரவைக் கூட்டத்தில் எதிர்க் கட்சிகள் கலந்து கொள்ளவில்லை.''

இரா. செழியன் :—''நாடாளுமன்றக் கூட்டத்துக்கு ஒருநாள் எதிர்க் கட்சிகள் வராவிட்டால் சட்டம் சீர்குலைந்து விட்டதாக அர்த்தமாகிவிடுமா?''

பட்டாச்சாரியா (இடது கம்யூ.):—''மேற்கு வங்காளத்தில் 25 எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சபைக்கு வரவில்லை; அதனால் சபையைக் கலைத்[து] விட்டார்களா என்ன?''

கல்யாணசுந்தரம் :—''தமிழ்நாட்டு [ந]ிலவரம் பற்றிக் கவர்னர் [அற]ிக்கை அனுப்பி விட்டாரா? [இ]ந்தப் பிரச்சினைக்குச் சட்டப் [ப]ரிகாரம் என்ன?''

[தி]ல்லான் :—நான் ஏற்கனவே கூறியபடி மூன்று விஷயங்களைப் [ப]ரிசீலிக்க வேண்டியிருக்கிறது; [அ]தன் பி[ற]குதான் [எ]துவும் [சொல்ல] [முடி]யும்.''

கி. மனோ[கரன்] :—''தமிழ[க] அரசியல் [நி]லைமை ப[ற்]றிச் சபாநாயகர் [...]ன்றிரண்[டு] நாட்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.''

தில்லான் :—''உங்கள் யோசனையை மதியழகனிடம் சொல்லுங்கள்; எனக்கு யோசனை கூறவேண்டாம்.''

வாஜ்பாய் :— ''சபாநாயகர்களுக்கு எல்லாம் நீங்கள்தான் தலைவர்; தமிழகச் சட்டப் பேரவையில் இப்போது சபாநாயகர் யார்?''

தில்லான் :—''யார் சபாநாயகர் என்பது தெரிந்த பிறகு நான் சொல்கிறேன்.''

தி. மு. க. உறுப்பினர்கள் :— ''தமிழகச் சட்டப் பேரவை பற்றி இப்படி எல்லாம் விவாதிக்க நமக்கு உரிமை கிடையாது.''

தில்லான் :—''நீங்கள் தமிழக சட்டப் பேரவைபோல் இங்கும் நடக்க வேண்டும் என்று விரும்பினால் — அப்படியே செய்யுங்கள்; இங்குள்ள சபாநாயகர், தமிழக சபாநாயகர் போல நடக்கமாட்டார்; முதலமைச்சர் பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை.''

ஓர் உறுப்பினர் :—''நாடாளுமன்றத்திலும், துணை சபாநாயகர் ஸ்வெல்' உங்கள் அருகில் உட்கார்ந்து சபையை நடத்தினால்......?''

தில்லான் (சிரித்துகொண்டே):—''ஸ்வெல என் அருகில் வந்து உட்காரவும் மாட்டார்—அப்படி உட்கார்ந்தால் நானும் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருக்கவும்மாட்டேன்; அவரும் நல்லவர் — நானும் நல்லவன்.''

இந்த விவாதம் 20 நிமிடம் நீடி[த்]தது; முடிவில் சபாநாயகர் கூ[றிய]தாவது :—

''உறுப்பினர்களின் கருத்[துக்களை] இங்கே கேட்டேன்; ஆ[...] நன்றாகப் பரிசீலித்த பி[ன்] தான மனோகரன் தீ[ர்மா]னத்தை அனுமதிப்பது பற்றி முடிவு எடுப்பேன்.

தமிழக சபாநாயகர் எனது நல்ல நண்பர்; அவரை அண்மையில் நான் சென்னையில் [...]

''தமி[...] விசாரணை ந[...] [மு]தலமைச்சர[...] வலது கம்யூ[...] [...]வேண்டும்'' [...] ருக்கும் — தி. [...] [...]டுத் தலைவர் பூ[...] இடையே வா[...] கழக உறுப்பின[...] [...]வாதம் நடைபெற்ற[து]

இதன் இ[...] 'டில்லியில் ஒ[...] [...]ர்ராகத் திரு. எஸ். [...] சாட்டினார்; [...] [...]று பிரிவினர் சதி செய[...] [...] கூறியதாவது :—

''எதிர்க் க[...] உள்[...] [...]ன் ஆட்சியில் ராக[...] [...]களுக்கு எதி[...] [...]த்தையும் — சீர் [...] உண்டாக்க [...]று பிரிவினர் [...]ர்.

[...] சட்டமும் — ஒழு[ங்கும்] [...]லந்து விட்டது என்[...] [...]நாட்டில் மறு தேர்த[ல்] [...] வேண்டும் என்றும் [...] அமைச்சர் [...]

சி. சுப்[...] சொல்ல[...]

''எத்தகைய [சபா]நாயகர் எங்களுக்கு இருந்தார் என்பது டில்லியில் உள்ள மக்களுக்குத் தெரியாது.''

அவர் இப்படிக் கூறியபோது, 'தமிழ்நாடு சபாநாயகரின் நடத்தை பற்றி விவாதிக்க வேண்டாம்' என்று துணைத் தலைவர் கௌரி முரகரி குறிப்பிட்டார்.

'மா[...]ண்ணை' என்ற பெயரில் 794 [ஏ]க்கர் — மன்றுடியாருக்கு ஒது[க்க]ப்பட்டதாகத் தகவல்

மேய்ச்[சல்] நிலத்தில் வேளாண்மை [செ]ய்தது பற்றி வழக்கு

[செ]ன்னை, டிச. 5—

தமிழ்[நா]டு [சட்ட]ப் பேரவையில், [...] உறுப்பின[ர்] [...] கேட்ட கேள்வி களும் — [...] [அமை]ச்சர்கள் அளித்த பதில்களு[ம்] [வரு]மாறு :—

தேவராச[ன்] ([தி.மு].க.):—''கோவை மாவட்டத்[தில்] [...]ன்னுள்] அமைச்சர் மன்று[டியா]ருக்கு மேய்ச்சல் நிலமாக எ[வ்]வளவு ஒதுக்கப்பட்டுள்ளது?

அமைச்சர் [...] உ. சண்முகம் :— ''பால் [...]ணை — கால்நடை வளர்ப்[பு] [...] என்று 794 ஏக்கர் 40 [...] நிலம் ஒதுக்கப்பட்[டுள்ளது]

ஜப்பா[...] [...]லீ.):—''பால் [பண்ணை]யில் மன்றுடியார் [...] [...]செய்தார் — நெல் [...]னபது உண் [...]

[...] :— அவர் பயிர் செய் [...]ண்மை : அதுபற்றிய [...]

[...]போது, எல் [...] [...] கத்தான் [...] நாங்கள் வந்த [...]க்கு என்ன நடக் [...]ியவில்லை.

[...]ரி நிகழ்ச்சிகள், [...]ங்காளத்திலும், [...] [...]ம்தான் நடக்க முடியும் [...]ன் நினைத்து இருந் [...] [...]ஆனால், தமிழ்நாட்டி [...]விட்டது.''

பிரச்சினை நீதிமன்றத்தில் இருக்கிறது.''

இலாபம் கிடைக்கிறது

கந்தசாமி (பார்வர்டு பிளாக்) :— ''தமிழ்நாட்டில் பால் அபிவிருத்திக்காகப் பொதுமக்களுக்குக் கடனுகவும் — மாடாகவும் வாங்கிக் கொடுத்து மேம்பாடு செய்துகொண்டிருக்கையில், தமிழ்நாட்டிலிருந்து தினமும் ஆயிரக்கணக்கான மாடுகள் கேரளத்துக்கு இறைச்சிக்காக அனுப்பப்படுகிறது; இதை அரசாங்கம் தடுத்து நிறுத்துமா?''

அமைச்சர் மு. கண்ணப்பன் :— ''தமிழ்நாட்டிலிருந்து கேரளத்துக்கும் பால் கொடுக்கும் மாடுகள் அனுப்பப்படுவது இல்லை; செத்து மடிய இருக்கும் மாடுகள் தான் அனுப்பப்படுகின்றன; அதனால் நமக்கு இலாபம்தான் கிடைக்கின்றன.''

கேரளத்திலிருந்து வருவதில்லை

நாகராசன் (தி. மு. க.) :—''கேரளத்திலிருந்து தமிழ்நாட்டுக்குக் கிழட்டு மாடுகள் எதுவும் வந்திருக்கிறதா?''

அமைச்சர் :—''கேரளத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு மாடுகள் வருவது இல்லை.''

அடிப்பது புயல் அல்ல—புழுதிக் காற்று

கழக அரசைக் கவிழ்க்க அதனல் இயலாது

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞா[illegible]

[illegible] ...ஆண்டுகளுக்கு முன்பு [illegible] ...ததாகும்; அதை அழிக்க [illegible] ...மை உண்டு; கல்லெறிகளாலும் — சோ[illegible] வீச்சுக்களாலும் அந்த ஆட்சியை அழித்துவிட அனுமதித்துவிடுவீர்களானல், உங்களுக்கு வாக்குரிமை இருந்தும் என்ன பயன்?

உங்களுடைய அரசியல் விவேகம் காரணமாக மேட்டுக்குடி மக்கள் விரும்பாத சாமானியர்களின் ஆட்சியை அமைத்தீர்கள்; அமைத்த பின்னர், மேட்டுக்குடி மக்களின் தாக்குதலிலிருந்து தி. மு. கழக அமைச்சரவையைக் காப்பதும் உங்கள் கடமையாகிறது"

என்று தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள், திருவண்ணாமலையில் 26—11—72 அன்று நடந்த கூட்டத்தில் வலியுறுத்தினர். அவர் மேலும் பேசியதாவது:—

"இன்றையத் தமிழக அமைச்சரவையை ஒரு கட்சியின்—அதாவது, தி. மு. கழகத்தின் அமைச்சரவையாக மட்டும் நான் கருதவில்லை; தமிழ் வளர்ச்சிக்கு — தமிழினத்தின் நல்வாழ்வுக்கும் பாடுபட்டு வரும் தமிழினத்தின் ஆட்சியாகவே நான் கருதுகிறேன்; உழைத்துப் பிழைக்கும் வர்க்கத்தின் அமைச்சரவையாகவும் நான் கருதுகின்றேன் — அதனுல்தான், அ.தி.மு.க.-வின் எதிர்ப்பிலிருந்து தி. மு. க. அமைச்சரவையைக் காப்பதற்குப் பாடுபடுகிறேன்.

இன்றைய அமைச்சரவை அகற்றப்பட்டால் அடுத்து வருவது எதுவாக இருக்கும்? காமராசர் காங்கிரசின் பெயரால் முன்னிருந்த மிட்டா மிராசுகளின் — தொழில் முதலாளிகளின் அரசாகத்தான் இருக்கும்; அதனை நான் விரும்பவில்லை.

இன்றுள்ள அரசு அகற்றப்படுமானல், தேவிகுளம்—பீர்மேடு தாலுகாக்களைப் பறி கொடுத்த — திருப்பதியைத் திரும்பப் பெறத் தவறிய — திருத்தணியையும் குமரி முனையையும் மீட்பதற்குத் தமிழரசுக் கழகம் நடத்திய கிளர்ச்சியை எதிர்த்துப் போராடிய தமிழினப் பகைவர்களின் ஆட்சிதான் திரும்ப வரும்; அதனை நான் விரும்பவில்லை; அதனுல்தான் தி. மு. கழக அரசை நிலை நிறுத்த நான் பாடுபடுகிறேன்.

இன்றுள்ள தமிழ் மாநிலம், தமிழரசுக் கழகம் பாடுபட்டுத் தேடிய தாகும்; காமராசர் பழைய சென்னை ராஜ்யத்தையே உறுதிப்படுத்த முயன்றார்; இராஜாஜி அவர்கள் நேருவின் ஆதரவோடு தட்சிணப் பிரதேசத்தை அமைக்க முயன்றார்; அந்த முயற்சிகளை எல்லாம் முறியடித்து இன்றுள்ள தமிழ் மாநிலத்தை அமைத்தது தமிழரசுக் கழகம்; இதனை அழிய விடுவதற்கு—திரும்பவும் தட்சிணப் பிரதேசம் அமைவதற்கு இடங்கொடுக்க நான் தயாராக இல்லை!

இன்றையத் தி. மு. கழக அரசை நிலைநிறுத்த அந்தக் கழகத்தின் தலைவரிலிருந்து கடைசித் தொண்டர்வரை எவ்வளவு உறுதியாகவும் உணர்ச்சிப் பெருக்கோடும் பாடுபடுவார்களோ அந்நிலையில், தமிழரசுக் கழகத் தலைவனுகிய நானும் — என் கழகத்தின் கடைசித் தொண்டரும் பாடுபடுவோம் என்பது உறுதி!

காற்று கொஞ்சம் வேகமா[illegible] அடிக்கிறது — அதை நான் மறைக்கவில்லை; — ஆனல், இது புயற் காற்று அல்ல — வெறும் புழுதிக் காற்று! கொஞ்சம் நம்மை அசிங்கப்படுத்தும் — அதற்கு மேல் இந்தப் புழுதிக் காற்று நம்மை எதுவும் செய்துவிட முடியாது!

நண்பர் எம். ஜி. ஆர்., 'தி.மு. கழகத்தினரில் சிலரோ பலரோ இலஞ்சம் வாங்கிப் பொருள் சேர்க்கிருர்கள்' என்று நம்பியிருந்தால் — அவர்களைத் திருத்தித் தூய்மைப்படுத்த அவர் விரும்பியிருந்தால், அதற்காக அ.தி.மு.க.-வை அவர் ஆரம்பித்திருக்கவேண்டாம்.

தமிழ்நாட்டு மக்களுக்கு நன்கு அறிமுகமாகியுள்ள அவர்—ஐயாயிரத்திற்கு மேற்பட்ட ரசிகர் மன்றங்களைப் பெற்றுள்ள அவர் — புதிய அரசியல் கட்சியைத் துவக்காமலே தி. மு. க.-வினரைத் திருத்த முயன்றிருக்கலாம்; அதற்கு நல்ல பலன் ஏற்பட்டிருக்கும்; அப்போது முதலமைச்சர் கூட ஓடிவந்து உதவி புரிந்திருப்பார்.

ஒரு புதுக் கட்சியைத் துவக்குவதென்ருல், அகில இந்தியாவுக்கும் நலன் தரத்தக்க புதிய கொள்கைகள் அதற்கு இருக்கவேண்டும்' அப்படிக்கின்றி, இலஞ்ச ஊழலை ஒழிப்பதற்காகவா புதிதாக ஒரு அரசியல் கட்சி?

தி. மு. க. ஆட்சியிலே இலஞ்ச ஊழல் மலிந்துவிட்டதென்று இவர்தாஞ சொன்னர்? இவர் சொல்லத் தொடங்கியது இரண்டுத் திங்களுக்கு முன்பு; திரு. காமராசர், தி. மு. க. ஆட்சி தோன்றிய நாளிலிருந்தே அந்த பாட்டைப் பாடி வருகிருரே — அவருடைய கட்சியில் இவர்போய் சேர்ந்திருக்கலாமே — இவருக்காகப் புதிய கட்சி எதற்கு?

'தி. மு. க. அரசு விலைவாசியைக் குறைக்கத் தீவிர முயர்சி எடுக்கவில்லை' என்று கூறி, அதற்காகப் பாடுபட ஒரு புதுக் கட்சியை எம். ஜி. ஆர். துவக்கியிருந்தால், அதை நான் வரவேற்றிருப்பேன்.

மாநில சுயாட்சி கோரும் தி. மு. கழக அரசு அதற்காகத் தீவிரமாகப் போராடவில்லை என்றே — மாநில சுயாட்சி தர மறுக்கும் மத்திய அரசுடன் ஒத்துழைத்துக் கொண்டிருப்பது தவறு என்றே கூறி, சுயாட்சிக்காக தி. மு. க.-வை விடவும் தீவிரமாகப் போராட ஒரு புதிய கட்சியை எம். ஜி. ஆர். துவக்கியிருந்தால் அவர் காலடியில் நான் போய் நின்றிருப்பேன்.

மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை — தமிழினத்தின் உரிமைப் போராட்டங்களைப் பின்னுக்குத் தள்ளும் வகையிலே இலஞ்ச ஊழலை ஒழிக்கப் போவதாகச் சொல்லிக்கொண்டு புதிய கட்சியைத் துவக்கியிருக்கிருர்; இதனுல், முற்போக்கான பிரச்சினைகளை எல்லாம் — போராட்டங்களை எல்லாம் மக்கள் மறக்கும்படிச் செய்துவிட்டார்.

இவருடைய கிளர்ச்சிகளைச் சமாளிக்க — சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட அரசுக்குச் [illegible] ...திகமாகிறது.

அமைச்சர்கள் [illegible] ...க்கைப் பிரச்சினைகளிலே [illegible] ...க்கு அவர்களைத் [illegible] ...களத்திலுள்ள [illegible] ...ரியாமலோ

எம். ஜி. ஆர். தி. மு. கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதன் விளைவுகளைப் பற்றி விவாதிப்பதற்காகச் சட்டமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு கம்யூனிஸ்டுத் தலைவர் கே. டி. கே. தங்கமணி கவர்னருக்குக் கடிதம் எழுதினர்; எம். ஜி. ஆரும் சட்டமன்றத்தை உடனே கூட்டுமாறு சபாநாயகரை நேரில் கேட்டுக் கொண்டார்; இவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில்தான் நவம்பர் 13-ல் சட்டமன்றம் கூட்டப்பட்டது; அந்தக் கூட்டத்தில் ஜனதிபதியிடம் கொடுத்த மனுவில் உள்ள இலஞ்சக் குற்றங்களை எம்.ஜி.ஆரோ கம்யூனிஸ்டுகளோ எடுத்துச் சொல்லியிருக்கலாம்; அமைச்சரவை மீது, நம்பிக்கையின்மை தெரிவிக்கும் தீர்மானத்தைக்கூடக் கொண்டுவந்திருக்கலாம்; இவற்றைச் செய்யாமல் சட்டமன்றத்தையே ஒத்திப் போட்டுவிட்டார்கள்; சட்டமன்றத்தைக் கூட்டும்படி கேட்டவர்களே அதை ஒத்திப்போடுவதற்குக் காரணமானர்கள்!

எம்.ஜி.ஆர். அரசியலிலே இன்னமும் பக்குவம் பெறவில்லை — அவசரப்படுகிருர் — ஆத்திரமும் காட்டுகிருர்; அரசியலிலே அவசரப்படுவதும் ஆத்திரப்படுவதும் கூடாது; நாளுக்கொரு போராட்டத்தை நடத்துகிருர் — இதனுலெல்லாம் அரசியலைக் கேலிக்கூத்தாக்கி வருகிருர்!

அமைச்சர்களும் — ஆளும்கட்சியின் எம்.எல்.ஏ.-க்களும் இராஜிநாமா செய்ய வேண்டுமென்று வாக்காளர் பேரணிகள் நடத்துகிருர்; இது தேவையற்ற முயற்சி; உண்மையில் வாக்காளருடைய நம்பிக்கையை தி.மு.க. அரசு இழந்துவிட்டது என்று எம். ஜி. ஆர். கூறுவது உண்மையானல், அதனை ஆளும் கட்சியும் உணரும்படி செய்வதற்கு வழிமுறைகள் இருக்கின்றன; எம். ஜி. ஆர். கட்சியிலுள்ள ஒன்பது உறுப்பினர்களும் கட்சி மாறியவர்கள்; அவருக்குப் பின் பலமாக உள்ள இந்திரா காங்கிரசைச் சார்ந்த 6 எம்.எல்.ஏ.-க்களும்கூட கட்சி மாறியவர்களே!

அதற்காகவே இந்தப் பதினைந்து பேரும் இராஜிஞமா செய்து மறு தேர்தலில் நிற்கக் கடமைப்பட்டிருக்கிருர்கள்; அதற்காக அல்லாவிட்டாலும், தி. மு. க. விஷயத்தில் வாக்காளர்கள் மன மாற்றம் அடைந்து விட்டார்கள் என்கிருர்களே — அதை நிரூபிப்பதற்காகவேனும் இவர்கள் எம்.எல்.ஏ. பதவிகளை இராஜிஞமாச் செய்து மறுதேர்தலுக்கு நிற்க வேண்டும்; அந்தத் தேர்தலிலே தி. மு. க.வை முறியடித்து இவர்கள் வெற்றி பெறுவார்களானல் அப்போது சட்டமன்றத்தைக் கலைக்கலாம்; அதுதான் சனநாயகம்; அவர்களுக்கே துணிவில்லை — பதவிகளைத் துறக்க! 'துறந்துவிட்டு மறுதேர்தலில் நின்ருல், வெற்றி பெற முடியாதோ' என்ற அச்சம் அவர்களுக்கு! இராஜிஞமா செய்ய வேண்டியவர்கள் அதைச் செய்யாமல், மற்றவர்களை இராஜிஞமா செய்யச் சொல்லி பேரணி நடத்துகிருர்கள். மத்திய அரசிலுள்ள வருமான வரித் துறை அதிகாரிகள் முயன்ருல் ஒரு மாகாண அமைச்சரவையைத் தொலைத்துவிட முடியும்; ஒரு மாநிலத்தில் உள்ள அரசியல் கட்சியை உடைத்துவிட முடியும்—என்ற நிலை இருக்குமானல், இதைவிடக் கேவலம் வேறு வேண்டுமா?"

தங்கத்தினும் விலை உயர்ந்த பிளாட்டினம்

தமிழக மண்ணுக்கடியில் உள்ளது

தோண்டியெடுக்க முயற்சி — அரசுக்குத் திட்டப் பணிக்குழு பரிந்துரை

சென்னை, டிச. 4—

"தங்கத்தைவிடப் பல மடங்கு விலை மதிப்புள்ள 'பிளாட்டினம்' என்ற உலோகம், தமிழ்நாட்டில் கிடைக்கிறது; இதைத் தோண்டியெடுக்க அரசு முயற்சி செய்ய வேண்டும்" என்று தமிழ்நாடு திட்டக் குழு பரிந்துரைத்துள்ளது.

இரும்பும் மேக்னீசியமும் கலந்துள்ள பாறைகளிலிருந்துதான் 'பிளாட்டினம்' என்ற விலையுயர்ந்த உலோகம் கிடைக்கிறது; இப்படிப்பட்ட பாறைகள் சேலத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் இருக்கின்றன; இந்தப் படிகங்களை வெட்டி எடுத்து இரசாயன முறை மூலம் பிளாட்டினம் தயாரிக்கலாம்.

இந்தப் பாறைகளில் பிளாட்டினம் கிடைக்கிறது என்பதைச் சோதனைக் கூடங்களில் நடந்த ஆராய்ச்சி நிரூபித்துக் காட்டியிருக்கிறது; எனவே, தமிழ்நாட்டில் பிளாட்டினம் எடுக்கும் முயற்சி மேற்கொண்டால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். இந்தப் பிளாட்டினம் தங்கத்தைவிட 16 மடங்கு விலை மதிப்புள்ள உலோகமாகும்.

தமிழ்நாடு திட்டக் குழுவில் உள்ள ஒரு பிரிவு (பணிக் குழு), தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய கனி வளங்களின் விபரங்களையும் அவற்றை எப்படித் தோண்டியெடுத்தால் இலாபகரமாக இருக்கும் என்பதையும் ஆராய்ந்து தமிழக அரசிடம் அறிக்கை கொடுத்திருக்கிறது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள விபரங்களை பத்திரிகை நிருபர்களிடம் திட்டக் குழுத் துணைத் தலைவர் எம். ஜி. இராஜாராம் மற்றும் பிரைட் சிங், டாக்டர் சரவணன் ஆகியோர் விளக்கிக் கூறியதாவது:—

"தமிழ்நா[illegible]

[illegible] யாலும் அதிகக் கழிவு போகிறது.

எனவே, இந்த முறையை உட[illegible] ஒழித்துவிட்டு மனித சக்தி[illegible] இயக்கப்படும் இயந்திரங்க[illegible] கொண்டு இந்த வேலைகளை செய்யவேண்டும் என்று ப[illegible] துறை செய்கிறோம்; இதற்கா[illegible] தனி அமைப்பை சுரங்கப் பொறியாளர் தலைமையில் ஏற்படுத்த வேண்டும்.

முக்கிய உலோகங்களை [illegible]

தமிழ்[illegible] கிராம[illegible] மின்சா[illegible]

நிதி ஆண்டிற்குள் நிறைவேறிவிடும்

புதுடில்லி, டிச. 5—

"இந்த நிதி ஆண்டு இறுதிக்குள் தமிழ்நாட்டில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி [illegible]

[illegible] ...மேலவை[illegible] ...பதிலளிக் [illegible] ...சரைத் துணை [illegible] ...த் ஹரீல் தெரி [illegible] ...த்தொடர்பில் அவர் [illegible] ...பிட்டதாவது:—

"த[illegible] ...டில் மொத்தம் 14,124 கிராமங்கள் இருக்கின்றன.

1972 மார்ச் 31-ந் தேதி வரையில் [illegible] கிராமங்களுக்கு மின்சார [illegible] ...ளிக்கப்பட்டிருக்கிற[illegible] ...ள்ள கிராமங்க[illegible] அடுத்த ஆண்டுக்குள் மின்சார இணைப்புத் தரப்பட்டுவிடும்.

[illegible] ...மாவட்டத்தில் 481 கிராம[illegible] ...ளுக்கும் — திருச்சியில் 254 [illegible] ...ங்களுக்கும் — தர்மபுரியில் [illegible] ...0 கிராமங்களுக்கும் மின்சார [illegible] கொ[illegible] வேண்டி [illegible]

[illegible] ...த்தில் இன்னும் ஓ"ர ஒரு கிராமத்துக்குத்தான் மின்சார வசதி செய்யப்படவில்லை."

கச்சத் தீவுமீது யாருக்கு உரிமை?

இந்தியா — இலங்கை அரசுகள் விவாதிக்கின்றனவாம்

புதுடில்லி, டிச. 5—

"கச்சத் தீவுமீது யாருக்கு அடிப்படை உரிமை இருக்கிறது என்பது பற்றி இந்திய அரசும் — இலங்கை அரசும் இன்னும் விவாதித்துக்கொண்டு இருக்கின்றன"

என்று வெளிவிவகாரத் துணையமைச்சர் சுரேந்திர பால் சிங் தெரிவித்தார்.

"நேசப்பான்மையுடன் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண இரு அரசுகளும் விருப்பம் தெரிவித்துள்ளன" என்றும் அவர் சொன்னர்.

அண்டை மாநிலத்துக்கு அரிசிக் கடத்தல்

தடுக்க எல்லையில் காவல் படை

தஞ்சாவூர், டிச. 5—

"அனுமதியின்றி அண்டை மாநிலங்களுக்குத் தமிழ்நாட்டிலிருந்து உணவுத் தானியங்கள் கொண்டுபோவதைத் தடுக்கும் பொருட்டுத் தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிகளில் தனி ஆயுதப் போலீசாரை நிறுத்துவது பற்றி தமிழ்நாடு அரசு ஆலோசித்து வருகிறது"

என்று உணவு அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்கள், இங்கு நிருபர்களிடம் கூறினர்; இத்தொடர்பில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"உள்ளூர் போலீசுக்குப் பதில் தனி ஆயுதப் போலீசுப் படை நிறுத்தினுல், உணவுத் தானியங்கள் அனுமதியின்றிகொண்டு போவதைத் தடுக்க அது உதவி செய்யும்.

மாநிலத்தில் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது."

வருமான வரி ஏய்ப்பு

திடீர் சோதனையில் சிக்கிய [illegible]ருள்கள்

[illegible] 24—

[illegible] ...சென்ற [illegible] ...பர் மாதம் நடத்திய 28 [illegible] சோதனைகள் மூலம் ரூ [illegible] ...லட்சம் பெறுமானத்திற் [illegible] ...கள் தங்க — வெள்ளிக் [illegible] ...ள், ரொக்கம் முதலியன [illegible] ...ப்பற்றப்பட்டன.

[illegible]

கோட்டை[illegible]

தியாகராய நகர் திடீர்ப் பிள்[illegible] யார் புகழ் கே. எம். சுப்பிரமணியம் தமது 'திடீர்க் கட்சித் தாவலு'க்கான காரணங்களை விளக்கி ஓர் அறிக்கை விடு[illegible] ...ள்ளார்.

அந்த அறிக்கையை, ஒரு வரி விடாமல் துருவித் துருவிப் படித்துப் பார்த்தேன்; அண்ணாவைப் பற்றியோ — அண்ணாவின் கொள்கையைப் பற்றியோ ஏதாவது குறிப்பிட்டிருக்க மாட்டாரா என்று தேடியது என் பேதை நெஞ்சம்' தம்பித் தவறிகூட அண்ணாவின் பெயரை அவர் குறிப்பிடவில்லை; அவர் புதிதாக 'ஆலிங்கனம்' செய்து கொண்டுள்ள கட்சியின் பெயரைக் குறிப்பிடும் இடத்தில் மட்டுமே அண்ணா என்று குறிப்பிட்டிருக்கிருர்.

பேரறிஞர் அண்ணாவின் கொள்கைக்கும் — இந்தத் தியாகராய நகர்ப் 'பெரிய மனித'ருக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்? இவரிடம் போய், நான் அதை எதிர்பார்த்ததே தவறுதானே!

"அண்ணாவின் வழியிலிருந்து தி. மு. கழகம் தவறிவிட்டது; அண்ணாவின் நேரடியான வாரிசு நான்தான்; அண்ணாவின் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகவே புதிய கட்சி ஆரம்பித்திருக்கிறேன்; அதற்காகவே, அண்ணாவால் துவக்கப்பட்ட கழகத்துடன் புனிதப்போர் தொடங்கியிருக்கிறேன்" என்றெல்லாம் புரட்சித் தலைவர் பறைசாற்றிக் கொண்டிருக்கிருர்!

அந்தக் கட்சியில் கடைசியாகப் புகலிடம் தேடிக்கொண்ட இந்தப் [illegible]ர்வழி, அண்ணாவின் கொள்கையைக் காக்கப்போவதாகவோ — அண்ணாவின் இலட்சியத்தைப் பரப்பப்போவதாகவோ ஒரு வரிகூடச் சொல்லக் காணோம்!

தி. மு. கழகத்தில் இருந்து வந்தவர்கள், ஏதோ தங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தின் [illegible]வாகவோ, எரிச்சலின் காரணமாகவோ கட்சி மாறிப் புதுக் கட்சிக்குப் போனர்கள் என்ருல் கூட அதில் வியப்பில்லை; ஏனென்ருல், அவர்களெல்லாம் அண்ணாவின் அறிவுரையால் — அன்பால் — பாசத்தால் ஈர்க்கப்பட்டவர்கள், அண்ணாவின் இதயத்தில் இடம் பெற்றவர்கள்; 'அவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு, அண்ணா பெயரால் கட்சி நடத்தப் போகிறேன்' என்று புரட்சித் தலைவர் கூறுவாரானல் அதில் கூடப் பொருள் உண்டு.

அப்படியில்லாமல், புரட்சியார் கட்சியில் சேர்ந்து தி. மு. க. ஆட்சியை ஒழிக்கப் போகிறேன் என்று பழைய குல்லாக் காங்கிரசுக்காரர் ஒருவர் கூறுவதும், அவரை ஏற்றுக்கொண்டு ஆட்சியைப் பிடிக்கப் போகிறேன் என்[illegible] ...லாய் போட [illegible] வர் கூறுவது[illegible] யாக இரு[illegible]

'தி. மு. கழகத்தையும் — கழக ஆட்சியையும் ஒழிக்க வேண்டும்' என்பதுதான் கே. எம். சுப்பிரமணிய ஐய[illegible] அன்றைய கொள்கை[illegible] — இன்றைய கொள்கை[illegible] ஆகும்; இதில் ஒன்றும் [illegible]ற்றமில்லை! முன்பு — காமராச[illegible] கட்சியில் இருந்து இதைச் [illegible]சான்னர்; அங்கு செல்லாக்[illegible]காசு ஆகிவிட்டதால், புதுக்[illegible] கட்சியில் வந்து புதிய பளபள[illegible] தேடப் பார்க்கிருர் — அவ்வளவு[illegible]!

இந்தப் பாலக்காட்டு ஐயருக்கு[illegible] — 'மறங்கிமலை மாரி'க்கும் என்ன தொடர்பு? குடிவழியிலா — கொள்கை வழியிலா? 'மொழி வழியில்' என்று யாரேனும் சொன்னல் நான் அதை நம்பத் தயாராயில்லை— எல்லாம் குல்லாய் வழித் தொடர்புதான்!

காந்தியார் இறந்தபோது இனிப்பு வழங்கியவர் இந்த கே. எம். சுப்பிரமணியம் — என்று தேர்தல் மேடைகளிலெல்லாம் பேசப்பட்டது — துண்டறிக்கைகளெல்லாம் போடப்பட்டது; அண்ணா இறந்தபோதுகூட அதே காரியத்தை இந்த நபர் செய்திருக்க மாட்டார் என்று எப்படிச் சொல்ல முடியும்? போகப் போக அதுவும் வெளியானலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! காந்தியார் இறந்ததை பூந்தி வழங்கிக் கொண்டாடினரோ இல்லையோ — அது நமக்குத் தெரியாது; காந்தியாரின் சம்பந்தியான ஆச்சாரியாரிடம் 'ஞானஸ்நானம்' பெற்றுச் சு[illegible]தராக் கட்சியில் முக்கி[illegible] முசராக விளங்கியது [illegible]மக்குத் தெரியும்.

ஆச்சாரியார் கட்சி[illegible] கழகத்தை ஆதரிக்கத் தொட[illegible]கியவுடன், அந்தக் கட்சியில[illegible]ருந்து காங்கிரசுக் கட்சிக்குத்[illegible] தாவியதும் நமக்குத் தெரியும்; [illegible]காங்கிரசுக் கட்சி உடைந்ததும் 'காமராசரிடம் இருப்பதா — [illegible] சுப்பிரமணியத்துடன் [illegible]வதா' என்று யோசித்துக் கொண்டிருந்தபோது தேர்தல் வந்தது; 'சிண்டிகேட்டில் தேர்தல் டிக்கெட் கிடைக்கும்', என்று உறுதியானதும் காமராசருடனேயே இருந்துவிட்டார்; அத்துடன், ஆச்சாரியார் கட்சியின் அனுக்கிரகமும் [illegible] ...லத்து வாக்காளர்க[illegible] ...ன உணர்ச்சியும்' [illegible]

[illegible] ...சய்ய[illegible] திருக்கு[illegible] ...ராகத்துக்கு [illegible] இல்லை; அவரே சொல்[illegible] கிருர் தமது தியாக உ[illegible] வைப் பற்றி — படியுங்கள்:—

"மாநில அரசுப் பொறுப்[illegible] பேற்றுள்ள கட்சி ஊழ[illegible] ஆட்சி நடத்துகிறது — இதை[illegible] களைத் தெறிய வேண்டுமே[illegible] என்ற நோக்கில் அகில [illegible] ...ல முக்கியத்துவம் வாய்ந்[illegible] காங்கிரசுக் கட்சியிலிருந்து[illegible] இராஜிநாமா செய்து—நேர்மையைக் குறிக்கோளாகக் கொண்டு ஊழலை ஒழித்துக் கட்ட உறுதி பூண்டு எ[illegible] ...ள்ள ஒரு மாநில [illegible] ...பில் நான் ஐக்கியமாகி[illegible] திலிருந்தே எனது '[illegible] தியாகம்' எத்தகையது [illegible] பதை உணராமலிருக்க [illegible] மாது."

[illegible]ிந்ததா அவருடைய தியா[illegible] [illegible] அவருடைய அறிக்[illegible] கை[illegible] ...ாராம்சம்!

ஊழல் ஆட்சி ஒழிப்பு ஒன்றுக்காகத்தான் அகில இந்தியக் கட்சியில் தமக்கு இருந்த இடத்தையும் தியாகம் செ[illegible]துவிட்டு — மாநிலக் கட்சியான [illegible] ...புதுக் கட்சிக்குத் தாவியிருக்கிரு[illegible]

அவருடைய சீரிய இலட்சியமான 'தி. மு. க. ஆட்சி ஒழிப்பு' ஒன்றுக்காகத்தான் புரட்சியார் கட்சியில் சேர்ந்திருக்கிறார்; 'அண்ணாவின் கொ[illegible]கையை நிறைவேற்ற வேண்டும்' என்[illegible] அல்ல! — புதுக் கட்சி[illegible] மறக் கொள்கைகளை[illegible] ஏற்றுக் கொண்டு அல்ல! 'புதுக் கட்சியில் [illegible] வேறு என்ன கொள்கை இருக்கிறது?' என்று எ[illegible] ...ட்டுவிடாதீர்கள்.

இ[illegible] ...த்தில்தான் எனக்கு [illegible]ரு சந்தேகம்! புரட்சிய[illegible] கட்சியை, 'மாநிலக் க[illegible]' என்று இவர் சொல்[illegible] டார்!

புரட்சியாரோ — கேரள[illegible] கருநாடகத்திலும், [illegible] திலும் மட்டுமல்ல — 'டெ[illegible] கூட எங்கள் கட்சி பலமாக வளர்ந்து வருகிறது' என்று கூறிவருகிருர்!

புரட்சியார் சொல்வது சரிய[illegible] புரட்சியார் கட்சியின் புதி[illegible] பிரமுகர் சுப்பிரமணிய ஐ[illegible] கூறுவது சரியா?

தலைவர் ஒன்றும் — தொண்ட[illegible] ஒன்றுமாகச் சொல்லலாமா? கட்சிக்குள் நுழையும்போதே கட்சித் தலைமைக்கு மா[illegible] இப்படி ஒரு கருத்தை வெ[illegible] யிட்டிருக்கிருரே இந்த [illegible]

இளம் குற்றவாளிகளை சீர்திருத்தும் மகத்தான பணி

'வரவேற்பு இல்ல'த்தைத் திற[illegible]வைத்து சத்தியவாணிமுத்து பா[illegible]ட்டு

சென்னை, டிச. 5—

சிறுவர் — சிறுமிகளாக இருக்கும்[illegible] குற்றம் செய்தத[illegible]வும், பெற்றோரால் கைவிடப்பட்டதாலு[illegible]வாழ வழியின்றி தவிக்[illegible] சிறுவர் — சிறுமிகளை வைத்துப் பராமரி[illegible]ச் சீர்திருத்தும் 'வரவே[illegible] இல்லம்' ஒன்[illegible] சென்னை கீழ்ப்பா[illegible]த்தில் உள்ளது; இதில் 300 மாணவர்களும், [illegible]ளும், மற்றும் சிறுவர் — சிறுமிகளும் உள்ளனர். அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

இந்த மாணவ — மாணவிகளுக்காகத் தமிழக அரசின் சார்பில் ரூ. 794,000 செலவில் 2 புதிய விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன.

அவைகளின் திறப்பு விழா சென்ற சனிக்கிழமை நடந்தது.

விழாவுக்குத் தமிழக அரசு உள்துறைச் செயலாளர் எஸ். பி. அம்புரோஸ் தலைமைதாங்கினர்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து இரண்டு புதிய விடுதிகளையும் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"குழந்தைகள் பிறக்கும் பொழுதே, 'குற்றம் செய்ய வேண்டும்' என்ற எண்ணத்துடன் பிறப்பது இல்லை.

அவர்கள் வளரும்போது, அவர்களைச் சுற்றி அமைகின்ற சூழ்நிலையின் காரணமாகக் குற்றம் செய்யத் தூண்டப்படுகிருர்கள்; ஒரு சில பெற்றேர்களும் உடந்தையாக இருக்கிருர்கள்.

சிறு பிள்ளைகளாய் இருக்கும் பொழுது, தெரிந்தோ தெரியாமலோ, அல்லது பிறரது தூண்டுதலினலோ தவறுகள் செய்யும் குழந்தைகள் — 3 வயது முதல் 18 வயது வரை உள்ளவர்கள் யாராக இருந்தாலும் — இந்தப் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுகிருர்கள்.

அப்படிப்பட்ட தவறுகள் — குற்றங்கள் செய்த பிள்ளைகளை நல்லவர்களாக மாற்றும் ஒரு மகத்தான பணியை இந்த நிறுவனத்தார் செய்து வருகிருர்கள் என்பதை எண்ணும்போது அவர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

சில பெரிய வீட்டுப் பிள்ளைகளும் குற்றம் செய்கின்ருர்கள்; அவர்கள் செய்த குற்றம் மாடி வீட்டிலேயே மறைக்கப்படுகின்றன; மாடி வீட்டு இரகசியங்கள் தெருவுக்கு வராது.

ஆனல், ஏழைகளின் நிலைமை அப்படியல்ல; அவர்கள் தெருவில வசிப்பவர்கள்; அவர்களது குழந்தைகள் ஏதாவது தவறு செய்தால், அந்தத் தவறு உடனே தெருவுக்கு வந்துவிடும்.

எனவே, பெற்ரேர்கள் குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்கு அளவோடு குழந்தைகள் பெற்றுக்கொள்வது மிகவும் நல்லது.

குற்றம் செய்தால் — பெற்ரேர்களால் கைவிடப்பட்டதால — வாழ வழியின்றித் தவிக்கும் குழந்தைகளை வரவேற்று, அவர்களது மன நிலையை மாற்றி — சமுதாயத்தில் அவர்களையும் நல்லவர்களாக வாழ வழிகாட்டும் இந்தப் பள்ளிக்கு 'வரவேற்பு இல்லம் என்ற பெயர் மிகவும் பொருந்தும்."

சென்னை நகர போலீஸ் கமிஷனர் கே. ஆர். ஷெனய் வரவேற்றுப் பேசினர்.

மற்றும் வரவேற்பு இல்ல இயக்குநர் ஜெயலட்சுமி, கண்காணிப்பாளர் (சூப்பிரண்டெண்டு) கந்தசாமி ஆகியோரும் பேசினர்.

விழா முடிவில், மாணவ — மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடந்தது.

[illegible]ம் ... ல் ... ம் ... கை

...ற ...ண்டு ...மாண ...ர்ஸெக் ...றும் சஸ் ...க்கிருர். ...கைப் ...அழைத்து ...சொல்லப் ...வழக்கு ...இரு ...ற்பட்ட ...உடைய ...றிறது. ...ரியருக் ...தமுவிய ...ண்டிவிட் ...ரும்பத்தக் ...து அமைதி ...டிருக்கிறது; ...ன்டும் அந்தச் ...இந்த அவையில் ...ப்போது உள்ள ...கடுத்த விடக் ...இ ஒத்தி ...அனும ...ணையை ...

...காரா ...ய இருச் ...க்கி உட ...அவர்க ...வைக்க ...எண் ...சமுதாய ...அவர் ...வேண்டி ...தொடர்ந்து

...க ...யி ... அத ... சி. ப[illegible] ...ஒத்திவைப்புத் தீர்மா[illegible] அனுமதியளிக்கவில்லை.

[illegible]ளைச் சேதப்படுத்தியது [illegible]தியின் அடையாளமா?

[illegible]ஊர்வலத்தில் வீசப்பட்டது திராவகம் அல்ல!

[illegible]பவம் பற்றி முதலமைச்சர் — ஒத்திவைப்புத் [illegible]த்தின்மீது விளக்கம்

சென்னை, டிச. 5—

[illegible]ணவர்கள் ஊர்வலம் போனபோது ஒட்டல் [illegible]ந்த சம்பவம் — அதனல் ஏற்பட்ட போலீசுத் [illegible]றி விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண் [illegible]னத்தை மேல்சபையில் எதிர்க கட்சித் தலைவர் (பழைய காங்கிரசு) கொண்டுவந்தார்; அதற் [illegible] முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறிய

...மதுரை ...ர்வலம் ...ளையங் ...ற்றச் ...டை

வீசப்பட்ட பாட்டில்களை எடுத்துப் பார்த்திருக்கின்றனர்; அதில் திராவகம் எதுவும் இல்லை; ஓட்டலிலிருந்த ஷாம்பு எண்ணெய் (நுரை வரும் எண்ணெய்) வைக்கப்பட்ட பாட்டில்கள்தான் வீசப்பட்டிருக்கின்றன என்று கண்டறிந்து இருக்கிருர்கள்.

அது திராவகமாக இருந்தாலும் — வேறு பாட்டிலாக இருந்தாலும், தெருவில் வீசக் கூடாது என்பது [illegible]ான்; அருகில் இருந்த மாண[illegible]ர்கள், 'வீசப்பட்டது திராவக[illegible]ல்ல' என்பதை ஒப்புக்கொண் [illegible]லும், தொலைவில உள்ள [illegible]கள் அதை நம்பவில்லை; அந்த வதந்தியை நம்பி, மாணவர்கள் சேதங்களை ஏற்படுத்தும் செயல்கள் பலவற்றில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இதையொட்டி வழக்குப் பதிவு செய்யப்பட்டு பலரும் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள்.

இந்தச் சம்பவம் பற்றி அவையை ஒத்திவைத்து ஒரு மணிநேரம் பேசினலும்கூட, அதையேதான் பேசவேண்டி வரும்.

மாணவர்கள் கிளர்ச்சி பற்றி ஈரோட்டில் எதிர்க் கட்சித் தலைவரின் தலைவரும் — தமிழ்நாட்டின் பெருந் தலைவர்களில் ஒருவருமான காமராசர் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிருர்.

"மாணவர்கள் போராட்டம் என்பது தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியா முழுவதும் நடைபெறுகிறது; 'நகைகளை அடகு வைத்துப் படித்துவிட்டு வேலை கிடைக்காததால இம்மாதிரி போராட்டங்களில் ஈடுபடுகிருர்கள்; இதை மத்திய — மாநில அரசுகள் தீர்க்கக் கடமைப்பட்டிருக்கின்றன: இந்த அரசு போய் எந்த அரசு வந்தாலும் மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது; மாணவர்கள் கடுமையாக உழைக்க முயற்சி செய்ய வேண்டும்" என்று சொல்லியிருக்கிருர்.

இந்த நல்ல அறிவுரையை மாணவர்கள் ஏற்பார்கள் என்றும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்."

அதன் பேரில் மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு, ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு அனுமதி கொடுக்கவில்லை.

எதிர்க் கட்சித் தலைவர்கள் வரிசையில் கே. ஏ. மதியழகன்

சட்டப் பேரவையில் இடம் ஒதுக்கப்பட்டது

சென்னை, டிச. 5—

சபாநாயகர் பதவியிலிருந்து நீ[illegible]கப்பட்ட திரு. கே. ஏ. மதியழ[illegible]னுக்குச் சட்டம் பேரவையில தனி இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சபாநாயகராக மட்டுமன்றி அமைச்சராகவும் அவர் பதவி வகித்திருக்கிருர்; அந்த வகையில், முன்னுள் அமைச்சர்—முன்னுள் சபாநாயகர் ஆகியவர்களுக்குச் சட்டமன்றத்தின் முன்வரிசையில் அமைச்சர்களுக்கும் பக்கத்திலோ அல்லது எதிர்க் கட்சி வரிசையில் முன்வரிசையிலோ இடம் ஒதுக்குவது மரபு ஆகும்.

அந்த அடிப்படையில் மதியழக[illegible]னுக்கு சட்டமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர்கள் அமரும் முன்வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சட்டமன்றத்தில் அவருக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து அவருக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் [illegible] வெளியிடப்படுகிறது.